18.08.2023

Accused produced.

**CC No. 240/2022**

அரசு தரப்பு சாட்சி **-1-**சுரேஷ்குமார்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்
**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ரகசிய தகவல் நேரடியாக காவல்நிலையத்தில் இருக்கும்போது கிடைக்கப்பெற்றது. கோட்டார் காவல்நிலையத்திற்கு தனி ஆய்வாளர் உள்ளார். அது வட்ட காவல்நிலையம் அல்ல. தகவலை உயர் அதிகாரி பெற்றுக்கொண்டதற்கான மேற்குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்தபோது ஆய்வாளர் காவல் நிலையத்தில் இல்லை. வெளி அலுவலாக சென்றிருந்தார். காவல் நிலையத்தில் இருந்து புறப்படும்போது 9.20 மணிஇருக்கும். நாங்கள் அனைவரும் அவரவர் இருசக்கரவாகனங்களில் சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவ இடம் காவல்நிலையத்தில் இருநது இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. காவல்நிலையத்திலிருந்து கிளம்பும் முன்னர் தனி நபர்கள் எவரையும் சாட்சியாக வைத்துக்கொள்ள அழைத்து செல்லவில்லை. காவல்நிலையத்திலிருநது சம்பவ இடத்திற்கு 10 நிமிட நேரத்தில் சென்றடைந்தோம். நாங்கள் சம்பவ இடம் சென்று 10 நிமிடத்தில் எதிரியை பார்த்தோம். எதிரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தார். இந்த விபரத்தை நான் முதல் தகவல் அறிக்கையிலும், விரிவான அறிக்கையிலும் திசை பற்றி கூறவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் எழுத்தர்-உமர்செரிப் எழுதினார். சோதனை சம்மத கடிதத்தில் அது எந்த தேதியில், எந்த இடத்தில்வைத்து எழுதப்பபட்டது யாரால் எழுதப்படடது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் எதிரியின்

கையொப்பம் மற்றும் சாட்சியின் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் காவல் துறையினராகிய நாங்களே சோதனை செய்யலாமா என்ற குறிப்பிட்ட வாசகங்கள் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் பிரிவு 50ன் படியான நிபந்தனைகளை பூர்த்தி செய்வில்லை என்பதால் அது சட்டப்படியான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. சம்பவ இடம் ஆட்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தனி நபர் சாட்சிகளை அழைத்தேன். ஆனால் எவரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. அவ்வாறு வர மறுத்த நபர்களின் பெயர் விலாசம் எதையும் நான் தனியே பதிவு செய்யவில்லை. மேற்படி நபர்களின் மீது எந்த குற்றநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி ஆவணம் கணினியில் பிரிண்ட் எடுக்கப்பட்டு பேனாவால் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணமாக உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி ஆவணத்தில் சான்றுப்பொருட்கள் எந்தவகையான தராசில் எடைபோடப்பபடடது என்றும் யாரால் எடைபோடப்பட்டது என்றும் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்கள் மீதும், மீதம் உள்ள கஞ்சா பொட்டலத்தின் மீதும் மாதிரி முத்திரை பதிக்கப்பட்டதாக அத்தாட்சி ஆவணத்தில் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். சான்றுப்பொருட்களுக்கு சிறப்பு குறியீடு கொடுக்கப்பட்டதாக அத்தாட்சி ஆவணத்தில் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் கையொப்பத்தின் கீழ் அத்தாட்சி ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி ஆவணத்தில் மாதிரி முத்திரை பதிக்கப்படவில்லை. அத்தாட்சியின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்டதாக குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம்

எதுவும் பதிவு செய்யவில்லை. சம்பவ இடத்தில் பார்வை மகஜர் , வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு 12.00 மணிக்கு வந்தோம். அந்த சமயத்தில் ஆய்வாளர் காவல்நிலையத்தில் இருந்தார். படிவம்-91 ஐ ஆய்வாளர் தயாரித்தார். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அதை இந்நீதிமன்றத்தில் ( முதன்மை நீதிமன்றத்தில்) தாக்கல் செய்தபோது நான் கையொப்பம் செய்தேன். 29.11.2021 அன்று அவ்வாறு கையொப்பமிட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விரிவான அறிக்கையில் ஆய்வாளர் அதனை எந்த தேதியில் பெற்றுக்கொண்டார் என்பதற்கு எந்த விபரமும் காணப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர்தான் விரிவான அறிக்கையை தயாரித்தேன். முதல் தகவல் அறிக்கை காலம் 3 பி- ல் தகவல் பெறப்பட்ட நேரம் 12.00 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 3 சி- ல் தகவல் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 4 ல்- ல் suo motu என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்களின் மீது உள்ள துண்டுத்தாளில் குற்ற எண் மட்டும காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. மாதிரி பொட்டலங்கள் மீது துண்டுத்தாள் ஒட்டியபின்னர் அதில் முத்திரை பதிக்கப்பட்டது. இன்று நான் பார்வையிடும் மாதிரி பொட்டலங்கள் மீது துண்டுத்தாள் ஒட்டப்பட்டு அதன் பின்னர் நூலால் சுற்றி கட்டி அதன் மீது அரக்கு சீல் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்று ஆஜர்படுத்தப்பட்டுள்ள சா.பொ.1 மற்றும் 2 சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட சான்றுப்பொருளே அல்ல என்றும் அவற்றை பின்னிட்டு எங்கள் வசதிக்கேற்ப காவல் நிலையத்தில் வைத்து தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. இரண்டு பொட்டலக்களிலும் ஒரு

அரக்கு சீல் மட்டுமே காணப்படுகிறது என்றால் சரிதான். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய பொட்டலத்திலும் ஒரு அரக்கு சீல் மட்டுமே காணப்படுகிறது என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்கள் மற்றும் மீதம் உள்ள சா.பொ.3ன் மீதும் நீதித்துறை நடுவரின் சுருக்கொப்பம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும் சொன்னவிதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் இவ்வழக்கில் கூறப்பட்டுள்ளதுபோல் சொன்ன இடத்தில் வைத்து எதிரி கைப்பற்றப்படவில்லை என்றும் அவரிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சொத்துக்களுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. போதை பொருள் சட்ட விதிகளை முறையாக கடைப்பிடிக்க வில்லை என்றால் சரியல்ல.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.